**இலங்கைப் பொருளாதாரத்தில் தனியார் வெளிநாட்டுமாற்றல் பெறுவனவுகள் : பிராந்தியரீதியானஓர் ஒப்பீட்டாய்வு.**

**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Mr. N. Sangeethan,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**ஆய்வுச் சுருக்கம்**

வெளிநாட்டு தனியார் பண அனுப்பலானது நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதுடன் பருநிலை பொருளியலின் நிலைத்து நிற்கும் தன்மைக்கும் துணைபுரிகிறது. வறுமைக்குறைப்புக்கு மிக முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது(சர்வதேச நாணய நிதியம்,.2005). வெளிநாட்டு தனியார் பண அனுப்பல்கள் வீட்டு துறையினர்களால் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? என்பது மிக முக்கியமாகும். வெளிநாட்டு தனியார் பண அனுப்பலானது குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு அல்லது அவர்களின் செலவீட்டை அதிகரிக்க் அதாவது நுகர்வு, வீட்டு வசதி, கல்வி மற்றும் சிறு வியாபார உருவாக்கம் போன்றவற்றிட்கு உதவுகிறது (Deshingkar and Abeeyar,2006).இலங்கைப் பொருளாதாரத்தில் அந்நியசெலாவணியை ஈட்டித்தரக்கூடிய பிரதான மூலகங்களுள் ஒன்றாய் வெளிநாட்டுதனியார் பணவனுப்பல்களானது காணப்படுகின்றது. ஒரு மில்லியனுக்கு அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில்புரிவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குடிபெயர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக,நாட்டிற்குள் உட்பாய்கின்ற வெளிநாட்டு செலாவெணியின் அளவு 2010ஆம் ஆண்டில் உட்பாய்ச்சல் அளவான அமெரிக்கடொலர் 4.1 மில்லியன் தொகையோடு ஒப்பீடு செய்யும்போது 2011ஆம் ஆண்டில் அத்தொகையானது அமெரிக்கடொலர் 5.1 மில்லியனாக பாரியஅளவில் அதிகரிப்பை காட்டி நிற்கின்றது(வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிக்கை,2013).

இலங்கையினைப்பொறுத்தவரையில் தற்போது வெளிநாட்டில் தொழில்புரிபவர்களில் 94 சதவீதமானவர்களில் மத்தியகிழக்குநாடுகளிலேயே தொழில் புரிகின்றனர்(இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்கள அறிக்கை2009). ஏனையவர்கள்கிழக்காசியா,தென்கிழக்காசியா,அவுஸ்ரேலியா,ஐரோப்பாபோன்றபிராந்தியங்களிலேயேஅதிகமாகதொழில் புரிகின்றனர். இலங்கையின் மொத்ததனியார் பணஅனுப்பல்களில் சர்வதேச பிராந்திய ரீதியானபங்களிப்பை அறிந்து கொள்வதுடன் அதனை மேலும் முன்னேற்றுவதற்கான வழிவகைகளை அடையாளப்படுத்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாக காணப்படுகின்றன.

இவ்வாய்வானது முதலாம் இரண்டாம் நிலைத்தரவுகளை பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்னிலைத்தரவுகள் நேர்காணல்கள் மூலமாகபெறப்பட்டுள்ளன. வெளிநாட்டில் தொழில் புரிபவர்கள் மற்றும் வெளிநாட்டு பயண முகவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்கள அறிக்கைகள், மத்தியவங்கி ஆண்டு அறிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் மற்றும் பத்திரிகைக்கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள்

பெறப்பட்டுள்ளன. மேலும் 1990 – 2010 வரையிலான காலத்தொடர் தரவுகளை அடிப்படையாகக் கொண்டுஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட காலத்தொடர் தரவுகளை மதிப்பீடு செய்வதற்கு விவரண புள்ளிவிபரமுறைகள், பிற்செலவுஆய்வுமுறைகள்,அட்டவணைகள் மற்றும் வரைபடங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக SPSS மென்பொருள் பயன்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பின்வரும் மாதிரியுருவானது மொத்த வெளிநாட்டு பணஅனுப்பல்களில் சர்வதேசபிராந்தியங்களின் பங்களிப்பை அறியப்பயன்படுத்தப்படுகிறது. பகுப்பாய்வின் படி.மத்தியகிழக்குநாடுகளின் மூலமானபணஅனுப்பல்களின்பிற்செலவுக் குணகம் 1.69 ஆகவும் நிகழ்தகவுப் பெறுமானம் (P – *Value*) 0.000 ஆகவும் காணப்படுகின்றது. மத்தியகிழக்குநாடுகளின் மூலமானபணஅனுப்பல்கள் ஒருஅலகால் அதிகரித்தால் மொத்த வெளிநாட்டு *பணஅனுப்பல்கள் 1.69அலகால் அதிகரிக்கும்.* இது நேர்க்கணியத் தொடர்பினைக் காட்டுகின்றது. இம்மாறியின் நிகழ்தகவுப் பெறுமானம் 0.000 ஆகக் காணப்படுவதனால் *மத்திய கிழக்கு நாடுகளின் மூலமான பணஅனுப்பல்களின* செல்வாக்கானது மொத்த வெளிநாட்டு பணஅனுப்பல்களில் புள்ளிவிபரரீதியாக பொருளுள்ளவகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே இங்கு மொத்த பண அனுப்பலில் மத்திய கிழக்குநாடுகளிலிருந்தான பணஅனுப்பல்களானது செல்வாக்குச் செலுத்துகின்றதுஎன இவ்வாய்வு *முடிவுசெய்கின்றது.*

**Keywords:** அந்நிய செலாவணி, வெளிநாட்டு தனியார் பணஅனுப்பல்கள், வெளிநாட்டுவேலைவாய்ப்பு, ஊழியப்படை.